30-09-2024.
O.S.No. 177/2018

பி.வா. சா. 1 நாராயணன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

தாவாச்சொத்தில் கண்ட 2 வது லக்கச் சொத்தான ஓட்டு வீட்டை நானும் என் மனைவியும் சுயசம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கிய சொத்து என்றால் சரிதான். இந்த சொத்தை வாங்குவதற்கு பூர்வீகச் சொத்துக்களில் வருமானம் எதுவும் எங்களுக்கு கிடையாது. 2 வது லக்கச் சொத்தைப் பொறுத்து நானும் என் மனைவியும் 2 கிரையப்பத்திரங்களின் கீழ் சொத்தை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். தாவா 2 லக்கச் சொத்தை 7 ம் பிரதிவாதி வைரமணிக்கு ரூ.7,20,000/-க்கு கிரையம் செய்து விட்டோம். நாங்கள் 2 வது லக்கச்சொத்தை விற்கும் போது அந்த சொத்து ஓட்டு வீடாக இருந்தது. வைரமணி கிரையம் பெற்ற பின்னர் ஓட்டு வீட்டை இடித்துவிட்டு ரூ.15 லட்சம் செலவு செய்து புதிதாக ஆர்சிசி லாகட வீடு கட்டி உள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்கு 7 ம் பிரதிவாதி பெயரில் வீட்டு வரி, தண்ணீர் வரி ஆகியவற்றை மாற்றி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். வாதியும் 2 முதல் 5 பிரதிவாதிகளும் எனது மக்கள். 18.05.2005 ம் தேதி வைரமணிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம் வாதசாஆ.3 ல் வாதியும் மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளும் சாட்சிகளாக கையெழுத்து போட்டு உள்ளார்கள் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி சரஸ்வதி என் மருமகள். 6 ம் பிரதிவாதி 5 ம் பிரதிவாதியின் மனைவி. வைரமணிக்கு நானும் என் மனைவியும் கிரையம் செய்தது என் குடும்பத்தார்கள் அனைவருக்கும் நன்கு தெரியும் என்றால் சரிதான்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.09.30 17:14:15 +0530

Principal District Judge,
Dindigul.